# ஹார்டுவேர் தொழில் வளர்ச்சிக்கு விரைவில் புதிய சலுகைகள்

## சிதம்பரம் அறிவிப்பு

சென்னை, செப்.11: 'மின்னணு உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் ஹார்டுவேர் தொழில் வளர்ச்சிக்காக தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் இணைந்து புதிய சலுகைகள் விரைவில் அறிவிக்கப்படும்' என்று மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

சென்னை மறைமலைநகரில் உள்ள ஸ்பெல் செமிகண்டக்டர் நிறுவனத்தின் சார்பில் 'லீட் ஃப்ரீ கண்டக்டர்' உற்பத்தியையும், 250 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் தொழிற்சாலை விரிவாக்கப் பணியையும் நேற்று துவக்கி வைத்து அமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது:

நமது நாட்டில் 15 ஆண்டுகளில் சாப்ட்வேர் துறை சிறப்பாக வளர்ந்திருக்கிறது. இன்னும் 15 ஆண்டுகளில் மின்னணு உதிரிபாகங்கள் தயாரிக்கும் ஹார்டுவேர் தொழிலும் வளர்ச்சி பெறும். சீனா, தைவான் போன்ற நாடுகளுக்கு தரமான போட்டியை கொடுக்க முடியும்.



ஹார்டுவேர் தொழில் வளர்ச்சிக்காக புதிய திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று பட்ஜெட் தாக்கல் செய்த போது தெரிவித்திருந்தேன். அதன்படி, விரைவில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமும், நிதி அமைச்சகமும் இணைந்து ஹார்டுவேர் தொழில் வளர்ச்சிக்காக சலுகைகளுடன் கூடிய புதிய திட்டத்தை விரைவில் அறிவிக்க உள்ளோம். வெளிநாடு சுற்றுப்பயணம் சென்றுள்ள பிரதமர் நாடு திரும்பியதும், அறிவிப்பு வெளி வரும்.

இனி வெளிநாட்டில் இருந்து உதிரி பாகங்களை இறக்குமதி செய்து இங்கு இணைத்து விற்கும் நிலைமை மாறும். நமது நாட்டிலேயே உதிரிப் பாகங்கள் உற்பத்தி செய்யலாம். அதற்காக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

நாட்டில் உள்ள மென்பொருள் உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆயிரக்கணக்கில் பொறியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த ஆண்டில் ஒரு லட்சமாக இருக்கும் இந்த் தேவை, அடுத்த ஆண்டில் ஒரு லட்சத்து 30 ஆயிரமாக உயரும். இயந்திரவியல், கட்டிடவியல், வேதியல் பொறியாளர்களும் இப்போது மென்பொருள் பொறியாளர்களாக மாறுகின்றனர். இதனால், சம்மந்தப்பட்ட துறைகளுக்கு பொறியாளர்கள் பற்றாக்குறை ஏற்படும். எனவே, அனைத்து துறைகளுக்கும் முக்கியத்துவம் தரப்படும்.

எந்த நாட்டுக்கும் சவாலை ஏற்படுத்தும் அறிவுத்திறன் மிக்கவர்கள் இந்தியர்கள். வெளிநாடுகளில் பல்வேறு நிறுவனங்களில் முக்கிய பொறுப்புகளில் இந்தியர்கள் இருக்கின்றனர். அவர்கள் தாய்நாட்டிற்கு திரும்பும் சூழல் உருவாகும். அவர்களுக்கு கதவுகள் திறந்தே இருக்கின்றன. அவர்கள் இங்கு வல்லுனர்களாகவோ, தொழில்முனைவோர்களாகவோ நாட்டின் வளர்ச்சிக்கு உதவலாம்.

இவ்வாறு நிதியமைச்சர் சிதம்பரம் பேசினார்.

ஸ்பெல் செமி கண்டக்டர் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஏ.ஆர்.ஆர்.எம்.அருண், தலைமை செயல் அதிகாரி சாம் வர்கீஸ் ஆகியோர் கூறியதாவது:

நாட்டிலேயே முதல்முறையாக 18 ஆண்டுகளுக்கு முன்பு செமிகண்டக்டர் தொழிலில் எங்கள் நிறுவனம் இறங்கி, இன்று லாபத்தில் இயங்குகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் 250 மில்லியன் டாலர் மதிப்பில் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்கிறோம்.

இந்த ஆண்டு 30 மில்லியன் டாலர் செலவில் 'லீட் ஃப்ரீ கண்டக்டர்களை' செய்யும் பணியை துவக்கியுள்ளோம். புதிய முதலீடுகளின் மூலம், உற்பத்தி பெருகுவதுடன் 600 பேராக இருக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை 5 ஆண்டுகளில் 3 ஆயிரத்து 500 ஆகவும், லாபம் 14 மில்லியன் டாலரில் இருந்து 445 மில்லியன் டாலராகவும் உயரும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். தொடக்க விழாவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவர் டி.எஸ்.நாரயணசாமி, ஸ்பெல் செமிகண்டக்டர் நிறுவனத்தின் தலைவர் ஏ.சி.முத்தையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்..